**தலைப்பு 106 – அனர்த்த முகாமைத்துவ அமைச்சு மற்றும் அந்த அமைச்சின் கீழுள்ள திணைக்களம் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை – 2014 ஆம் ஆண்டு**

---

இந்த அறிக்கையின் 1 ஆம் பந்தி மற்றும் 2 ஆம் பந்தியில் அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள திணைக்களத்தின் கணக்குகள் தொடர்பான பொதுத் தகவல்கள் உள்ளடக்கப்பட்டிருந்ததுடன் 3 ஆம் பந்தி முதல் ஒவ்வொரு தலைப்பிற்குமான கணக்காய்வு அவதானிப்புக்கள் காண்பிக்கப்படுகின்றன.

**1. அமைச்சின் கீழுள்ள திணைக்களம்**

| தலைப்பு | திணைக்களம் |
| --- | --- |
| 304 | வளிமண்டலவியல் திணைக்களம் |

**1.1 கணக்காய்வின் நோக்கெல்லை**

மேற்கூறப்பட்ட 1 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட அனர்த்த முகாமைத்துவ அமைச்சினதும் வளிமண்டலவியல் திணைக்களத்தினதும் 2014 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், இணக்கக்கூற்றுக்கள், ஏடுகள் பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் என்பன இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கைகள் கீழே குறிப்பிடப்பட்ட திகதிகளில் அமைச்சின் செயலாளருக்கும் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்திற்கும் வழங்கப்பட்டன. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்கள் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக்கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு ஒன்றினை மேற்கொள்ளக்கூடிய முறையில் தயாரிக்கப்பட்டதாகும்.

| தலைப்பு | அமைச்சு / திணைக்களம் | முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை வழங்கப்பட்ட திகதி |
|---|---|---|
| 106 | அனர்த்த முகாமைத்துவ அமைச்சு | 2015 ஒக்தோபர் 08 |
| 304 | வளிமண்டலவியல் திணைக்களம் | 2015 ஒக்தோபர் 08 |

**1.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்புக்கள்**

ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் என்பவற்றை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய சட்டரீதியான ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிர்வாகப் பிரமாணங்களுக்கு இணங்க பேணுதல், தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்ற கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமானதாக சமர்ப்பிப்பதற்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், செயற்படுத்தல் மற்றும் பேணுதல் என்பன இப்பொறுப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

**2. கணக்குகள்**

**2.1 ஒதுக்கீட்டுக் கணக்கு**

**மொத்த நிதிஏற்பாடும் செலவினமும்**

அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள திணைக்களத்திற்காக வழங்கப்பட்டிருந்த மொத்த தேறிய நிதிஏற்பாடு ரூபா 4,546.38 மில்லியனாக இருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதிவரையில் அதில் ரூபா 4,310.03 மில்லியன் தொகை பயன்படுத்தப்பட்டிருந்தது. இதன் பிரகாரம், அமைச்சினதும் திணைக்களத்தினதும் தேறிய நிதிஏற்பாடுகளிலிருந்தான சேமிப்புக்கள் முறையே ரூபா 225.27 மில்லியன் மற்றும் ரூபா 11.08 மில்லியன் அதாவது தேறிய நிதிஏற்பாட்டில் 5.29 சதவீதம் மற்றும் 3.81 சதவீதம் ஆகக் காணப்பட்டது. விபரம் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| தலைப்பு | 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறானது | | | தேறிய நிதிஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்பு |
|---|---|---|---|---|
| | தேறிய நிதிஏற்பாடு | பயன்பாடு | சேமிப்பு | |
| | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | |
| 106 | 4,255.85 | 4,030.58 | 225.27 | 5.29 |
| 304 | 290.53 | 279.45 | 11.08 | 3.81 |
| மொத்தம் | **4,546.38** | **4,310.03** | **236.35** | 5.20 |

**2.2 முற்பணக் கணக்குகள்**

**2.2.1 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள்**

**2.2.2 பாராளுமன்றத்தால் அங்கீகரிக்கப்பட்ட எல்லைகள்**

அமைச்சு மற்றும் அதன் கீழுள்ள திணைக்களத்திறகுரிய அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகளுக்காக பாராளுமன்றத்தால் அங்கீகரிக்கப்பட்ட எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| விடய இலக்கம் | செலவினம் | | பெறுவனவுகள் | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|---|
| | ஆகக் கூடிய எல்லை | உள்ளபடியானது | ஆகக் குறைந்த எல்லை | உள்ளபடியானது | ஆகக் கூடிய எல்லை | உள்ளபடியானது |
| | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் |
| 10601 | 7.0 | 6.8 | 2.5 | 3.7 | 16.0 | 12.9 |
| 30401 | 10.0 | 7.0 | 5.5 | 7.9 | 60.0 | 30.5 |

**2.3 பொது வைப்புக் கணக்குகள்**

அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள திணைக்களத்தின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பொது வைப்புக் கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 10.90 மில்லியனாக இருந்தது. விபரங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| அமைச்சு/ திணைக்களம் | வைப்புக் கணக்கு இல. | 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி |
|---|---|---|
| ----------------------------- | --------------------------- | ----------- ரூபா மில்லியன் |
| அனர்த்த முகாமைத்துவ அமைச்சு | 6000/0000/00/0015/0020/000 | 1.65 |
| வளிமண்டலவியல் திணைக்களம் | 6000/0000/00/0015/0159/000 | 9.25 |
| | | ------------ |
| மொத்தம் | | 10.90 |
| | | ======= |

## 2.4 கணக்காய்வு அவதானிப்புக்கள்

2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதியறிக்கைகள் மற்றும் புத்தகங்களின் பிரகாரம் அனர்த்த முகாமைத்துவ அமைச்சினதும் வளிமண்டலவியல் திணைக்களத்தினதும் ஒதுக்கீட்டுக் கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள் 1.1 ஆம் பந்தியில் காண்பிக்கப்பட்டதன் பிரகாரம் முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட அவதானிப்புக்களுக்கு உட்பட்டு திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டிருந்தது. அந்த முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் உள்ளடக்கப்பட்ட அவதானிப்புக்களில் பொருண்மையானதும் முக்கியத்துவமானதுமான அவதானிப்புக்கள் 3 ஆம் பந்தி முதல் 4 ஆம் பந்தி வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்டுள்ளன.

## 3. தலைப்பு 106 – அனர்த்த முகாமைத்துவ அமைச்சு

### 3.1 பதிவேடுகள் மற்றும் ஏடுகள் பேணப்படாமை

அமைச்சினால் கீழே காண்பிக்கப்படுகின்ற சில பதிவேடுகள் பேணப்படாதிருந்ததுடன் சில பதிவேடுகள் முறையாகவும் நாளதுவரையாகவும் பேணப்படாதிருந்தமை தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்டது.

| | பதிவேடுகள் வகை | உரிய பிரமாணம் | அவதானிப்புக்கள் |
|---|---|---|---|
| (அ) | கணணி, உபபாகம் மற்றும் மென்பொருள் தொடர்பான நிலையான சொத்துப் பதிவேடு | 2002 நவம்பர் 28 ஆந் திகதிய ஐஏஐ/2002/02 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை | பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை |
| (ஆ) | பெறப்படுகின்ற காசோலைகள், காசுக்கட்டளை | நிதிப்பிரமாணம் 451 இல் காண்பிக்கப்படுகின்ற ஏற்பாடுகளின் பிரகாரம் | பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை |

| | | | |
|---|---|---|---|
| | போன்றவற்றுக்கான பதிவேடு | ஜீ.ஏ.எம் 83 ஆம் படிவம் | |
| (இ) | அலுவலக தொலைபேசிப் பதிவேடு | நிதிப்பிரமாணம் 845(1) இன் பிரகாரம் 26 ஆவது பின்னிணைப்பு | பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை |
| (ஈ) | மின்சார உபகரணங்கள் தொடர்பான பதிவேடு | நிதிப்பிரமாணம் 454(2) | பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை |
| (உ) | பொறுப்புக்கள் தொடர்பான பதிவேடு | நிதிப்பிரமாணம் 214 | பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை |
| (ஊ) | அடியிதழ்சேர் புத்தகங்களின் பதிவேடு | நிதிப்பிரமாணம் 341 இன் ஏற்பாடுகளின் பிரகாரம் ஜீ.ஏ.என் 20 படிவம் | பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை |
| (எ) | எரிபொருள் மற்றும் உராய்வு எண்ணெய் இருப்புப் பதிவேடு | நிதிப்பிரமாணம் 1645(அ) இல் காண்பிக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் பொது 267 படிவம் | பேணப்பட்டிருக்கவில்லை |
| (ஏ) | வாகன நிரற்படுதல் பதிவேடு | நிதிப்பிரமாணம் 1647(உ) | பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை |
| (ஐ) | கொள்வனவுக் குழுவினதும் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவினதும் வருகைப் பதிவேடு | அரசாங்க கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 2.11.2 ஆம் வழிகாட்டி | பேணப்பட்டிருக்கவில்லை |
| (ஒ) | குழுக்கூட்ட அறிக்கை | அரசாங்க கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 2.11.3 (அ) ஆம் வழிகாட்டி | பேணப்பட்டிருக்கவில்லை |
| (ஓ) | வாகன சம்பவத் திரட்டுப் புத்தகம் | நிதிப்பிரமாணம் 1647(ஈ) | நாளது வரையாக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஔ) | நிலையான சொத்துப் பதிவேடு | 1978 திசெம்பர் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை | நாளது வரையாக்கப்பட்டிருக்கவில்லை |

**3.2 ஒதுக்கீட்டுக் கணக்கு**

**3.2.1 பாதீட்டு முரண்கள்**

8 செலவின விடயங்களுக்காக ஒதுக்கப்பட்ட ரூபா 558.94 மில்லியன் கூட்டுத்தொகையான நிதி ஏற்பாடுகளிலிருந்து ரூபா 517.41 மில்லியன் தொகை பயன்படுத்தப்பட்டிருந்தது. அமைச்சிற்கு திறைசேரி செயற்பாடுகள் திணைக்களத்தினால் கட்டுநிதி வழங்கப்படாமையினால் அந்த செலவின விடயங்களிலிருந்து ரூபா 41.53 மில்லியன் அதாவது ஒதுக்கப்பட்ட தேறிய நிதிஏற்பாட்டில் 55 சதவீதம் முதல் 100 சதவீதம் வரையிலான வீச்சில் நிதி ஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது.

**3.3 சொத்துக்கள் முகாமைத்துவம்**

**வருடாந்த பொருள் மெய்மையாய்வை நடாத்துதல்**

2014 ஒக்தோபர் 17 ஆந் திகதிய 02/2014 ஆம் இலக்க அரசாங்க நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் 2014 ஆம் ஆண்டிற்கான வருடாந்த பொருள் மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டு அந்த அறிக்கை 2015 மார்ச் 17 ஆந் திகதிக்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் அமைச்சினால் 2015 மே 31 ஆந் திகதி வரையிலும் அந்த அறிக்கை கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. இறுதியாக வருடாந்த பொருள் மெய்மையாய்வு அறிக்கை 2013 ஆம் ஆண்டிற்காகவே நடாத்தப்பட்டிருந்தது.

**3.4 இணங்காமைகள்**

**சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் முதலியவற்றுடன் இணங்காமைகள்**

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக்கோவையின் XXIV ஆம் அத்தியாயத்தின் 4.2.3 ஆம் பிரிவின் பிரகாரம் சம்பளக் கடன் கொடுப்பனவு தொடர்பாக ஓய்வு பெறும் சந்தர்ப்பத்தின் போது அறவிடப்படாதுள்ள ஊழியர்கடன் மீதிகள், மாற்றப்பட்ட ஓய்வூதியத்திலிருந்து அறவிடுவதற்கு ஓய்வூதியப் பணிப்பாளருக்கு அல்லது திணைக்களத் தலைவருக்கு அதிகாரத்தை வழங்குவதற்கு 23 ஆவது பின்னிணைப்பில் காணப்படுகின்ற மாதிரிப் படிவத்தின் பிரகாரம் உத்தரவாதப் பத்திரத்தை கடன்பெற்ற உத்தியோகத்தரிடமிருந்து பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 3.5 செயலாற்றல்

2014 இன் வருடாந்த பாதீட்டு மதிப்பீடு மற்றும் செயல்நடவடிக்கைத் திட்டம் என்பவற்றின் பிரகாரம் அமைச்சின் செயன்முன்னேற்றம் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

### (அ) போதியளவில் நிறைவேற்றப்படாத பிரதான பணிகள்

அமைச்சின் பிரதான பணிகள் போதியளவாக நிறைவேற்றப்படாதிருந்ததுடன் அவ்வாறு அவதானிக்கப்பட்ட சில சந்தர்ப்பங்கள் கிழே காண்பிக்கப்படுகின்றன.

(i) அமைச்சினால் அனர்த்தங்களுக்கு ஈடுகொடுக்கக் கூடிய வகையில் 139 வீடுகளை நிர்மாணிப்பதற்காக மீளாய்வாண்டின் போது 24 மாவட்டங்களுக்கு ரூபா 60,146,608 தொகையான நிதி ஏற்பாடு வழங்கப்பட்டிருந்தது. 2015 நவம்பர் 20 ஆந் திகதி வரையில் 09 மாவட்டங்களில் 54 வீடுகளினதும், 03 மாவட்டங்களில் 14 வீடுகளினதும் வேலைகள் முடிவடைந்திருந்தன. அதன் பிரகாரம் 68 வீடுகளில் வேலைகள் முழுமையாக பூர்த்தி செய்யப்பட்டிருந்ததுடன் மிகுதி 71 வீடுகளினதும் வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

(ii) அனர்த்த உதவிச் சேவை நிலையத்தினால் அம்பாந்தோட்டை, களுத்துறை மற்றும் மொனராகலை போன்ற 03 மாவட்டங்களுக்காக நீர்த்தாங்கிகளைக் கொள்வனவு செய்வதற்கு முறையே ரூபா 2,000,000 தொகையும், ரூபா 1,000,000 தொகையும், ரூபா 1,000,000 தொகையுமாக ரூபா 4,000,000 கூட்டுத்தொகை உரிய மாவட்டச் செயலாளர்களுக்கு வழங்கப்பட்டிருந்தன. எவ்வாறாயினும் கொள்வனவு செய்யக்கூடிய தாங்கியின் அளவு காண்பிக்கப்படாதிருந்ததுடன், மொனராகலை மாவட்டத்திற்கு மாத்திரம் ரூபா 299,000 செலவில் 1,000 லீற்றர் நீர்த்தாங்கிகள் 26 உம், களுத்துறை மாவட்டத்திற்கு ரூபா 2,224,490 செலவில் 181 நீர்த்தாங்கிகளும், அம்பாந்தோட்டை மாவட்டத்திற்கு ரூபா 495,000 செலவில் 49 நீர்த்தாங்கிகளும் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. அதன் பிரகாரம் ரூபா 3,018,490 பெறுமதியான நீர்த்தாங்கிகள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. எஞ்சிய ரூபா 981,510 தொடர்பான விபரங்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 3.6 மனித வளங்கள் முகாமைத்துவம்

### (அ) அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்

2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறாகும்.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் எண்ணிக்கை | உள்ளபடியான பதவியணியினர் எண்ணிக்கை | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 23 | 18 | 05 |
| (ii) | மூன்றாம் நிலை | 04 | 02 | 02 |
| (iii) | இரண்டாம் நிலை | 441 | 401 | 40 |
| (iv) | ஆரம்ப நிலை | 47 | 33 | 14 |
| (v) | ஏனையோர் (அமைய/ தற்காலிக / ஒப்பந்த அடிப்படை) | 02 | - | 02 |
| | மொத்தம் | 517 | 454 | 63 |

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

மீளாய்வாண்டின் இறுதிவரையிலும் தேசிய அனர்த்த நிவாரண சேவைகள் நிலையத்தின் உதவிப் பணிப்பாளர், நிர்வாக உத்தியோகத்தர் மற்றும் அமைச்சின் உள்ளகக் கணக்காய்வாளர் போன்ற 63 பதவிகளில் வெற்றிடங்கள் காணப்பட்டன.

### (ஆ) ஏனைய தரப்பினரிடமிருந்து பெறப்பட்ட மனித வளங்கள்

அமைச்சினால் ஏனைய தரப்பினர்களிடமிருந்து கிழே குறிப்பிடப்படுகின்ற பிரகாரம் மனித வளங்கள் பெறப்பட்டிருந்தன.

| ஊழியர் வகை | எண்ணிக்கை | ஏனைய தரப்பினர் | காலப்பகுதி |
|---|---|---|---|
| முகாமைத்துவ உதவியாளர் | 01 | மேல்மாகாண மின்வலு மற்றும் மீள்புத்தாக்க சக்தி தேசிய அமைச்சு | 2011.01.09 முதல் 2015.01.09 வரை |
| பிரத்தியேக உதவியாளர் | 01 | மொழிகள் மற்றும் சமூக ஒருமைப்பாட்டு அமைச்சு | 2011.01.01 முதல் 2015.01.09 வரை |
| சாரதி | 01 | தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை | 2013.06.009 முதல் 2015.01.09 வரை |

## 4. தலைப்பு 304 – வளிமண்டலவியல் திணைக்களம்

### 4.1 பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணப்படாமை

திணைக்களத்தால் கீழே காண்பிக்கப்படுகின்ற பதிவேடுகள் பேணப்படாதிருந்ததுடன் சில பதிவேடுகள் முறையாகவும் நாளதுவரையாகவும் பேணப்படாதிருந்தமை தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது.

| | பதிவேடுகளின் வகை | உரிய பிரமாணம் | அவதானிப்புக்கள் |
|---|---|---|---|
| (அ) | கணணி, உபபாகம் மற்றும் மென்பொருள் தொடர்பான நிலையான சொத்துப் பதிவேடு | 2002 நவம்பர் 28 ஆந் திகதிய ஐஏஐ/2002/02 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை | பேணப்பட்டிருக்கவில்லை |
| (ஆ) | அலுவலகத் தொலைபேசிப் பதிவேடு | நிதிப்பிரமாணம் 845(1) இன் பிரகாரம் 26 ஆவது பின்னிணைப்பு | பேணப்பட்டிருக்கவில்லை |
| (இ) | பிணைப் பதிவேடு | நிதிப்பிரமாணம் 891(1) | பேணப்பட்டிருக்கவில்லை |
| (ஈ) | மின்சார உபகரணங்கள் தொடர்பான பதிவேடு | நிதிப்பிரமாணம் 454(2) | பேணப்பட்டிருக்கவில்லை |
| (உ) | எரிபொருள் மற்றும் உராய்வு எண்ணெய் இருப்புப் பதிவேடு | நிதிப்பிரமாணம் 1647(ஈ) | பேணப்பட்டிருக்கவில்லை |

| | | | |
|---|---|---|---|
| (ஊ) | கொள்வனவுக் குழுவினதும் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவினதும் வருகைப் பதிவேடு | அரசாங்க கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 2.11.2 ஆம் வழிகாட்டி | பேணப்பட்டிருக்கவில்லை |

**4.2 ஒதுக்கீட்டுக் கணக்கு**

**பாதீட்டு முரண்கள்**

304-2-1-2104-11 ஆம் செலவின விடயத்திற்காக ரூபா 17,095,479 தொகையான நிதிஏற்பாடு ஒதுக்கப்பட்டிருந்த போதிலும், திறைசேரி செயற்பாடுகள் திணைக்களத்தினால் போதியளவான பிரகாரம் கட்டுநிதி வழங்கப்படாமையினால் அம்மொத்த நிதி ஏற்பாட்டிலிருந்து ரூபா 10,001,486 தொகை அதாவது 58.5 சதவீத நிதி ஏற்பாட்டை பயன்படுத்துவதற்கு முடியாதிருந்தது.

**4.3 பொது வைப்புக் கணக்கு**

02 வருடங்களை விஞ்சிய ரூபா 3,196,562 கூட்டுத்தொகையான 06 வைப்புக்கள் தொடர்பாக நிதிப்பிரமாணம் 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**4.4 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான இணக்கக்கூற்று**

30401 ஆம் விடய இலக்க அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இணக்கக்கூற்றின் பிரகாரம் அத் திகதியில் உள்ளவாறு அறவீடுகள் நிலுவையாக இருந்த மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 172,479 ஆக இருந்ததுடன் அந் நிலுவை மீதிகள் 05 வருடங்கள் முதல் 21 வருடங்கள் வரையிலான காலத்தினைக் கடந்திருந்த போதிலும் அக்கடன் மீதிகளை அறவிடுவதற்கு திணைக்களம் தவறியிருந்தது.

**4.5 சொத்துக்கள் முகாமைத்துவம்**

திணைக்களத்தின் சொத்துக்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

**(அ) நடைமுறையல்லாச் சொத்துக்கள்**

வளிமண்டலவியல் திணைக்கள வளவில் புற்களைப் பதிப்பதற்காக ரூபா 1,143,790 தொகை செலவிடப்பட்டிருந்ததுடன் அப்பெறுமதி வளவை பராமரிக்கும் செலவினமாக இருக்க வேண்டிய போதிலும், நிலையான சொத்துப் பதிவேட்டில் காணி மற்றும் காணி அபிவிருத்தியின் கீழ் உள்ளடக்கப்பட்டிருந்தது.

**(ஆ) வெளித்தரப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ள சொத்துக்கள்**

திணைக்களத்தின் தலைமை அலுவலகம் அமைந்துள்ள காணிக்குரிய 99.4 பேர்ச் பரப்பளவுள்ள காணி 2008 ஆம் ஆண்டின் போது அனர்த்த முகாமைத்துவ அமைச்சின் கட்டிடத்தை நிர்மாணிப்பதற்காக வழங்கப்பட்டிருந்ததுடன் அதன் முழு உரித்தும் 2014 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் அமைச்சிற்கு கையளிக்கப்பட்டிருக்கவில்லை.

**4.6 நட்டமும் இழப்பும்**

மீளாய்வாண்டிற்கான திணைக்களத்தின் நட்டங்கள் மற்றும் அறவீடுகள் கூற்றின் பிரகாரம் 05 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக அறவிட வேண்டியிருந்த ரூபா 126,580 தொகையை தொடர்ந்தும் அறவிடுவதற்கோ அல்லது பதிவழிப்பதற்கோ அல்லது கைவிடுவதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**4.7 செயலாற்றல்**

2014 இன் வருடாந்த பாதீட்டு மதிப்பீட்டினதும் மற்றும் செயல்நடவடிக்கைத் திட்டத்தினதும் பிரகாரம் திணைக்களத்தின் செயன்முன்னேற்றம் தொடர்பான அவதானிப்புகள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

**டொப்லர் ரேடார் முறைமை**

டொப்னர் ரேடார் முறைமையைக் கொள்வனவு செய்வதற்காக 2007 மற்றும் 2008 ஆம் ஆண்டுகளின் போது ரூபா 320,000,000 உலக வளிமண்டலவியல் நிலையத்திற்குச் செலுத்தப்பட்டிருந்தது. அதனை ஸ்தாபிப்பதற்கு மத்திய பொறியியல் உசாத்துணைப் பணியகத்துடன் ரூபா 60,452,000 கிரய மதிப்பீட்டின் அடிப்படையில் ஒப்பந்த உடன்படிக்கையில் கைச்சாத்திடப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பெறுமதி சேர் வரியுடன் ரூபா 50,131,059 தொகை அப்பணியகத்திற்குச் செலுத்தப்பட்டிருந்தது. அந்த இயந்திரம்

2013 ஒக்தோபர் மாதமளவில் பொருத்தி பூர்த்தி செய்யப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், 2015 செப்தெம்பர் 30 ஆந் திகதி வரையிலும் இந்த இயந்திரம் செயற்படுத்தப்படாமையினால் அந்த இயந்திரத்தைப் பொருத்தி 01 வருடமும் 11 மாதங்களுமான காலம் செயற்பாடற்ற நிலையில் காணப்படுகின்றமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

**4.8 மனித வளங்கள் முகாமைத்துவம்**

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்**

2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறாகும்.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் எண்ணிக்கை | உள்ளபடியான பதவியணியினர் எண்ணிக்கை | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 54 | 39 | 15 |
| (ii) | மூன்றாம் நிலை | 29 | 04 | 25 |
| (iii) | இரண்டாம் நிலை | 238 | 170 | 68 |
| (iv) | ஆரம்ப நிலை | 139 | 118 | 21 |
| (v) | ஏனையோர் (அமைய/ தற்காலிக ஒப்பந்த அடிப்படை) | - | 10 | - |
| | மொத்தம் | 460 | 331 | 129 |